விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 26 புதன்கிழமை (09.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 141

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# றிச்சட் பௌச்சர் இன்று யாழ்.வருகை

## மனித உரிமை மீறல் குறித்து ஆராய்வார்

(கொழும்பு)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உதவிச் செயலாளர் றிச்சட் பௌச்சர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார். யாழ்ப்பாணம் வரும் அவர் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல தரப்பினருடனும் சந்தித்து கேட்டறியவுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## இயற்றாளையில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வீடொன்றில் வைத்து நேற்றுக் காலை 9.40 மணியளவில் இளைஞர் ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் வரணி இயற்றாளையைச் சேர்ந்த தவராசா சுஜீதரன் (வயது 19) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். குறித்த இளைஞன் வீட்டிலிருந்தவேளை அங்கு சென்ற மூன்று ஆயுததாரிகள் இளைஞனை துரத்திச் சென்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நாளாக விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். ஊழியர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் மாணவர்களின் போராட்டம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக ஊழியர்கள் தாக்கப்பட்டமை மற்றும் யாழ். மாணவர்கள் கடத்தப்பட்டமை என்பவற்றைக் கண்டித்து நேற்றும் நேற்று முன்தினமும் விரிவுரைப் பகிஷ்கரிப்பில் மாணவர்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வெல்லாவெளிப் பிரதேச மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை

யுத்த அகதிகளாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெயர்ந்து தங்கியிருக்கும் 38 ஆயிரம் குடும்பங்களில் போரை தீவுப்பற்று வெல்லாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 8 ஆயிரத்து 600 குடும்பங்களையும் எதிர் வரும் 14 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை மீளக்குடியமர்த்துவதென அரசு முடிவெடுத்துள்ளது.

முன்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தற்போது படையினரின் கட்டுப்பாட்டிலிருக்கும் இந்தப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் மற்றும் அதற்கு முன்னரான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (ச-5)

## தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐவர் மகசின் சிறையில் போராட்டம்

மன்னார் கடலில் வைத்து ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐந்துபேர் கொழும்பு மகசின் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கின்றனர்.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்களான இவர்கள் நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தில் குதித்திருக்கின்றனர். கைது செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே கொழும்பு மகசீன் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நீண்டகாலம் விசாரணையின்றி விளக்கமறியலில் தாங்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ளது. (ச-3)

## கூட்டமைப்பு எம்.பிக்களின் சிறப்புரிமை மீறப்படுகிறது

### நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

## மன்னார் தம்பனையில் தாக்குதல் புலி உறுப்பினர்கள் இருவர் பலி

(மன்னார்)

மன்னார் தம்பனைக்கு மேற்காகவுள்ள குறிசுட்ட குளத்தில் படையினரின் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடாத்திய முறியடிப்புத் தாக்குதலில் படையினர் தமது நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர். இத்

## நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன் மற்றும் பா.அரியநேந்திரன் ஆகியோர் நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையை முன்வைத்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு வரும் போது மூன்று இடங்களில் தமது வாகனம் சோதனைக்குள்ளாக்கப்பட்டதாகவும் பொலிஸ் பாதுகாப்புடன் (04 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் தம்பனைக்கு மேற்காகவுள்ள குறிசுட்ட குளத்தில் படையினரின் முன்னகர்வு முறியடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். நேற்று பிற்பகல் 2 மணிக்கு செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் படையினர் குறிசுட்டகுளம் பகுதிக்கு முன்னகர்வை மேற்கொண்டனர்.இம் முன்னகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடாத்திய முறியடிப்புத் தாக்குதலில் படையினர் தமது நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர். இத் தாக்குதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவரின் சடலம் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட (04 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டன் அரசுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பாக நடந்தேறிய விவாதத்திற்கு எதிராகவும் அதன்பின்னர் பிரித்தானிய அரசு இலங்கைக்கான நிதி உதவித்தொகையை நிறுத்தி வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பிரித்தானியாவில் இலங்கை அரசையும் விடுதலைப்புலிகளையும் ஒருங்கே கருத்தரங்கு ஒன்றுக்கு அழைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகளுக்கு எதிராகவும் தலைநகர் கொழும்பில் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்புப் போராட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

பௌத்த மதகுரு அல்லே குணவன்ச தேரர் தலைமையிலான இலங்கை தேசாபிமான முன்னணி (04 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் விமானத் தாக்குதல்களுக்கு வெளிநாடுகள் கண்டனம் தெரிவிக்கவில்லை

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் கொழும்பில் வான் தாக்குதலை நடத்தியமைக்கு எந்த ஒரு வெளிநாடும் கண்டனம் தெரிவிக்காமையானது வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கம் செல்வாக்கை இழந்து வருவதை புலப்படுத்துவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் போது மக்கள் சமாளிக்க முடியாத வகையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். கண்டி இந்து கலாசார மண்ட (04 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் விமானப்படையின் இரண்டு கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன. புதுக்குடியிருப்பு க ̣ ணன் குடியிருப்புப் பகுதி மீது நேற்றுக் காலை 10.30 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஏழு பிள்ளைகளின் தாயாரான கர்ணன் குடியிருப்பைச் சேர்ந்த மாரிமுத்து கனகம்மா என்பவர் காயமடைந்துள்ளார். (ஏ-5)

# வெளிநாட்டவர்களின் தலையீடு உள்விவகாரங்களில் தேவையில்லை

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உள் விவகாரங்களில் வெளிநாட்டவர்களின் தலையீட்டை கொண்டுவர முயற்சிக்க வேண்டாமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சர்வதேசத்தின் மத்தியில் நாட்டின் சுய கௌரவத்தை காட்டிக்கொடுக்க வேண்டாம் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கைக் குடும்பங்கள் இரத்தம் சிந்தியது போதும் அவர்கள் பாதிக்கப்பட்டது போதும். இப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

வெளிநாடுகள் இலங்கை மீது திணிக்கும் தீர்வு இந் நாட்டுக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)


# வவுனியாவில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியாவில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பண்டாரிக்குளம் அம்மன் ஆலய வீதியில் நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட இந்த இளைஞர் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு இளைஞர்கள் தம்மை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் தாம் திருப்பிச் (04. ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**



ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் யாழ்.ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப விழாவின் போது மங்கல விளக்கினை ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் சர்வதேசத்திற்கான இணைப்பாளரும் ஆலோசகருமான ஹென்றிக் குறுனட் ஏற்றுவதனையும் தலைமை உரையினை ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் உரை நிகழ்த்துவதனையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

## சடலத்தை இனங்காண கோரிக்கை

35 வயது மதிக்கத்தக்க வெள்ளை நிற சேட்டும் கறுத்த காற்சட்டையும் அணிந்துள்ள ஆள் ஒருவரின் சடலமானது கடந்த 2 ஆம் திகதி மட்டுவிலில் எடுக்கப்பட்டு சாவகச்சேரி நீதிவானால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை இச் சடலமானது எவராலும் உரிமை கோரப்படாத நிலையில் இருப்பதால் உரித்துடையோர் இச் சடலத்தை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (சு)

## சுகாதாரத் திணைக்கள மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாதாந்தம் நடைபெறும் மாவட்ட சுகாதாரத் திணைக்கள கூட்டம் இன்று காலை 7.30 மணிக்கு சுகாதாரத் திணைக்கள பணிமனையில் வழமைபோல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சகல சுகாதாரத் திணைக்கள வைத்திய அதிகாரிகளையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ)

## நடமாடும் வங்கிச் சேவை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதி கிளையினால் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் நடமாடும் வங்கிச் சேவையை நடாத்தவுள்ளது.

இதில் அரசாங்க ஊழியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவிற்குரிய கணக்குகளும் இலவச ஏ.ரி.எம். அட்டைகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களும் விநியோகிக்கப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற வுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

இத் தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-3)

# தீயணைப்பு இயந்திரத்தை மீளமைக்க 10 லட்சம் அமெரிக்க டொலர் செலவு?

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலில் சேதமடைந்த செல் எரிவாயு நிலையத்தின் தீயணைப்பு இயந்திரங்களைச் சீரமைக்க 5 லட்சம் அமெரிக்க டொலர் முதல் 10 லட்சம் அமெரிக்க டொலர் வரை செலவிடப் படவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

புலிகளின் வான் தாக்குதலில் செல் எரிவாயு சேமிப்பு நிலையத்தின் தீயணைப்பு இயந்திரப் பகுதி நேரடியாகப் பாதிப்புக்குள்ளானது. இதனையடுத்து அந்நிறுவனம் மூட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இலங்கையில் முதன்மை எரிவாயு விநியோகிப்பு நிறுவனமாக செல் நிறுவனம் இயங்கி வந்தது. செல் நிறுவனம் மூடப்பட்டதனைத் தொடர்ந்து மற்றொரு பிரதான நிறுவனமான லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தினரால் தேவைக்குரிய எரிவாயுவினை விநியோகிக்க இயலவில்லை என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு யாழ்.இந்துக் கல்லூரி சமூகம் வேண்டுகோள்

ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட உயர் தர மாணவர்களை விடுவிக்குமாறு யாழ்ப்பாணம் இந்து கல்லூரி சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இனந்தெரியாத ஆயுததாரிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுவிக்குமாறு யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் மற்றும் 80 ஆசிரியர்கள் கையொப்பம் இட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது கல்லூரி மாணவர்கள் இருவர் இனங்காணமுடியாத ஆயுததாரிகளால் 04.05.2007 அன்று அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். இவ்விரு மாணவர்களையும் சம்பந்தப்பட்டோர் விடுவித்து கல்விச் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாண்வர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மக்களின் அருஞ்சொத்துக் கல்வி. மாணவர்களின் நலன்கருதி, இனங்காணப் படாத ஆயுததாரிக்ளால் கடத்தப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்க்ளான சுந்தரலிங்கம் யசோதரன், நாகராஜா வேணுகாணன் இருவரையும் விடுதலை செய்து மாணவர்கள் சுதந்திரமாகவும் பயமின்றியும் கல்வியினைத் தொடர வாய்ப்பு அளிக்குமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் மிக உருக்கமாகவும் பணிவுடனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (எ)

# இராணுவத் தளபதி அடங்கிய குழு வன்னி, அம்பாறைக்கு விஜயம்

(கொழும்பு)

வன்னி மற்றும் அம்பாறை பகுதிகளின் நிலைமைகளை இராணுவத்தின் தளபதிகள் அடங்கிய குழுவினர் ஆய்வு செய்தனர். விமானப் படைத் தளபதி டொனால் பெரேரா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இக் குழுவினர் ஆய்வுநடத்தினர்.


இராணுவத்தளபதி சரத்பொன்சேகா, இராணுவ மூத்த அதிகாரிகள், அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் முதலில் மகா ஓயா சிறப்பு அதிரடிப் படை முகாமை பார்வையிட்டனர்.

அப்பகுதி பாதுகாப்பு நிலைமைகளை முகாமின் தளபதி கேணல் சி.பி.கலகெ விபரித்தார். அதன்பின்னர் வன்னி இராணுவத் தலைமையகத்திற்கு இக்குழு சென்றது.

பிரதேச பாதுகாப்பு நிலைமைகளை இராணுவத் தளபதி என்.விஜயசிங்க விபரித்தார்.

இராணுவத்தினருக்கு முக்கிய ஆலோசனைகளை வழங்கிய பின்னர் இக் குழுவினர் கொழும்பு திரும்பினர் என்று பாதுகாப்புத் தலைமைச் செயலகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# ரணில் சீனா பயணம்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 11 ஆம் திகதி சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

சீனஅரசின் அழைப்பின் பேரில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பாராளுமன்றக் குழு சீனா செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு சீனா செல்லும் ரணில் தலைமையிலான குழுவினர் சீன அரச உயர் மட்டக் குழுவினருடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

இலங்கைப் பிரச்சினை குறித்து விரிவாக இச் சந்திப்பில் ஆராயவுள்ளதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## நாளை கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

இன்று இடம்பெற இருந்த கப்பல் சேவை நாளை இடம்பெறும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். இன்று செல்ல இருந்த கப்பல் பயணத்தினை மேற்கொள்ள அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட அரச உத்தியோகஸ்தர்கள், பொதுமக்கள் தமது பயணத்தினை நாளை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (சு)

## விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. உதவிப் பொதுமுகாமையாளர்(வழிநடத்தல்), உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட இணைப்பாளர், முகாமையாளர் (ஆய்வு அபிவிருத்தி), முகாமையாளர் (உறுதி தொடர்பான சேவைகள்), கணக்காய்வு உத்தியோகஸ்தர், சுயாதீன விற்பனை மேம்படுத்தல் முகாமையாளர்(ஒப்பந்த அடிப்படையில்), பிரத்தியேக உதவியாளர், வரவேற்பாளர், எழுதுவினைஞர், தட்டச்சாளர்(தமிழ்) ஆகிய பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் 11 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானிப் பத்திரிகையை இன்று முதல் வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம். (சு)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ வைத்தியசாலை மருத்துவர்களால் 511-வது இராணுவப் படையணி நிர்வாகப் பகுதிக்குட்பட்ட அச்சுவேலி, தோப்பு, நெல்லியோடை, ஆவரங்கால், புத்தூர், கோப்பாய், பத்தமேனி கிராமங்களில் வாழும் மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்று மே மாதம் 6 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

யாழ்.படைத் தளபதியின் ஆலோசனையில் அச்சுவேலி சிவில் இணைப்பதிகாரி அலுவலக கட்டடத்தில் நடைபெற்ற இந்த மருந்து முகாமில் சுமார் 500 நோயாளிகள் சிகிச்சை பெற்றார்கள் என பலாலி பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது. (சு)

# பிரான்ஸில் 17 தமிழர்கள் கைது கண்டித்துப் புதுவையில் ஆர்ப்பாட்டம்

## பத்தாம் திகதி நடாத்த ஏற்பாடு

(சென்னை)

பிரான்ஸில் தமிழர் பிரதிநிதிகளின் கைதைக் கண்டித்து புதுவை மாநிலத்தில் 38 இயக்கங்கள் சார்பில் பாரிய கண்டனப் பேரணி ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் தங்களின்உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். இரக்க மற்ற கொடூரத் தாக்குதலால் இதுவரை ஒரு லட்சம் தமிழர்கள் பலியாகி யுள்ளனர்.

லட்சக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். ஈழத் தமிழர்களுக்கான அடிப்படைத் தேவைகள் எல்லாவற்றிற்கும் அரசு தடை விதித்துள்ளது. யாழ்ப்பாண நெடுஞ்சாலையைத் திட்டமிட்டே மூடியுள்ளது.

இதனால் தமிழர்கள் பட்டினியால் தினம் தினம் செத்து மடிகின்றனர். உலகில் எந்தவொரு நாடும் உதவிட முன்வராத நிலையில் சொந்த மக்களின் ஆதரவை மட்டுமே நம்பிப் போராடி வருகின்றனர்.

எனவே பிரான்ஸ் நாட்டில் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள 17 ஈழத் தமிழர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் கண்டனத்தைத் தெரிவிக்கவும் புதுச்சேரியிலுள்ள பிரான்ஸ் தூதரக அதிகாரியிடம் மனு அளிக்க நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் அலையலையாகத் தமிழர்கள் அணிதிரளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## சபிண்டீகரண அழைப்பு



சர்வசித்து வருடம் சித்திரை மாதம் 16 ஆம் திகதி(29.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமான எமது சகோதரரும் உசனைப் பிறப்பிடமாகவும் வேலணை முடிப்பிள்ளையார் கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ இ.சோமாஸ்கந்தக் குருக்களின் சபிண்டீகரணம் சித்திரை 28 ஆம் நாள் 11.05.07 வெள்ளிக்கிழமை நடைபெறவிருப்பதால் அனைவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சிவஸ்ரீ இ.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் (லண்டன்)
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
(ஆதீன கர்த்தா ஸ்ரீ சுந்தரஆஞ்சநேயர் கோவில்,
மருதனார்மடம்)
சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள்
(உசன் கந்தசாமி கோவில்)

இணுவில் மேற்கு
இணுவில்

(056)

ஆராய்ந்து அறிவதும் சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல, உயர்ந்த கடமையும் கூட.

—இங்கர்சால்

வலம்புரி

# அமெரிக்கத் தூதுவரின் வருகை வெற்றி பெறுமா?

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளுக்கான வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் றிச்சட் பௌச்சர் நேற்றுக் கொழும்பிற்கு வருகை தந்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நிலைமையை அவதானிப்பதற்காக இலங்கை வந்துள்ள அமெரிக்கத் தூதுவரினால் முன்னேற்றம் ஏதும் இடம்பெறுமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

கொழும்புக்கு வந்துள்ள பௌச்சர், இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாகவும் அறிய முடிகின்றது. கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டில் மக்கள் படும் இன்னல்கள் மற்றும் பாதுகாப்பற்ற சூழல் குறித்து ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வரும் அமெரிக்கத் தூதுவரிடம் அரச அதிகாரிகளும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் நிலைமையை எடுத்துக் கூறுவார்கள் என நம்பலாம்.

அதேநேரம் யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர்களையும் றிச்சட் பௌச்சர் யாழ்.செயலகத்தில் சந்திப்பாராயின், நிலைமைகளை அவர் அறிந்து கொள்வதற்கு வசதியாக அமையும்.

எனினும் யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர்களை அவர் சந்திப்பதற்கு தயங்குவார் என்ற கருத்துக்களும் பரவலாக அடிபடுவது வேறு கதை.

எதுவாயினும் அமெரிக்காவின் விசேட தூதுவராக இலங்கைக்கு வந்துள்ள றிச்சட் பௌச்சர், நாட்டின் அமைதியும் சமாதானமும் ஏற்படுவதற்கான வழிமுறைகளை கையாள வேண்டும் என்பதே பொதுமக்களின் பிரார்த்தனை.

அதேநேரம் இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் யுத்தத்திற்கு அமெரிக்காவின் தாராளமான பங்களிப்பு இருந்ததை மறுத்துவிட முடியாது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற பேரில் இலங்கைக்குத் தேவையான ஆயுதம், பயிற்சி, பாதுகாப்புத் திட்டம் என்றவாறு பல்வகை உதவிகள் அமெரிக்காவினால் வழங்கப்பட்டன.

2002 ஆம் ஆண்டில் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்குப் பின்னர் கூட அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, மிலிந்த மொறகொடவின் உதவியுடன் அமெரிக்காவுடன் இணைந்து தமிழ் மக்களின் வாழ்வியலுக்கு எதிராகத் திட்டங்களைத் தீட்டினார் என்ற செய்தி தமிழ் மக்களிடம் மிக ஆழமாக ஊன்றியுள்ளது.

இதுதவிர இலங்கை அரசுக்குச் சார்பாக அமெரிக்கா அவ்வப்போது வெளியிடும் அறிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசுகளை ஊக்குவிப்பதாக இருந்ததை மறுப்பதற்கில்லை.

எதுவாயினும் இப்போது மனித உரிமை மீறல் தொடர்பில் ஆராய வந்திருக்கும் பௌச்சர், உண்மை நிலைமை கண்டறிந்து கொள்வாராயின், அதுவே திருப்தியாகும்.

# தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கு 72 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கு அனுமதி பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் தங்களுக்குரிய நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதத்தையும் ஏனைய விபரப் படிவங்களையும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அலுவலகத்திற்கு உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட 72 மாணவர்களின் விபரம் வருமாறு,

ஐ.சுபாசினி(புதுவளவு, வல்வெட்டி), கே.மேனகா (கோவில் கலட்டி,வல்வெட்டி), ஏ.அமிர்தவர்சினி(79, ராஜேஸ்வரி றோட், அரியாலை), எம்.காயத்திரி (அன்பகம், ஏழாலை மேற்கு), கே.சிவதர்ஷினி(நெல்லண்டை, பருத்தித்துறை), ஏ.நிஷாந்தினி(ஞானச்சாரியம் றோட்,துன்னாலை மேற்கு), என்.காண்டீபன் (வளவத்தை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு), ரி.துளசி (விபுலானந்தர் வீதி, மாதகல்), கே.கலைமகள் (19,பண்டாரிக்குள ஒழுங்கை, நல்லூர்),

எஸ்.அமிர்தினி (41, நொத்தாரிசு ஒழுங்கை, அரியாலை மேற்கு), பி.விக்னராஜா(சோடக்கன், இளவாலை வடக்கு), எஸ்.சுமணா(கைதடி தெற்கு,கைதடி),பி.தர்ஷினி(699/1, கே.கே.எஸ். றோட்,யாழ்ப்பாணம்), கே.சுபவீனா(மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு), ஆர்.துஷ்யந்தன் (மாவிலடி, புலோலி வடக்கு), ஜி.சஜந்தா(மட்டுவில் கிழக்கு, பொற்கொல்லர் றோட், சாவகச்சேரி), கே.அகல்யா (கலட்டி வீதி, கரணவாய் கிழக்கு), ஈ.சுதந்திரா (40,செபஸ்ரியன் றோட், பாசையூர்),

பி.லோகினி(52,பிரதான வீதி, ஆனைக்கோட்டை), பி.சோபிகா (31,காட்டுக்கந்தோர் வீதி,சுண்டிக்குளி), பி.சுவர்ணரேகா(றாகம), கே.சுதாதேவி(மடத்தடி,அல்லாய் கிழக்கு), பி.அபிராமி (சின்னக்கடை,பொலிகண்டி), வி.கிர்லியா(அம்பன் குடத்தனை), பி.லோகிதா(அம்பன், குடத்தனை),வை.துளசிகா(115,பிறவுண் றோட், யாழ்ப்பாணம்), எஸ்.துளசிகாஜினி (பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி,இணுவில் மேற்கு), ஆர்.சசீலன்(அத்தியடி றோட்,சங்கத்தானை), கே.பிரசாந்தன் (ருதிவாசா,நெல்லியடி), பி.தவலிங்கம் (டச் றோட், உடுவில்),

எஸ்.தில்லைமகாராஜன்(அம்பலவாணர் வீதி, உடுவில்), எல்.சதாமா(நந்தாவில் மேற்கு ஒழுங்கை, தாவடி), எஸ்.கணேஸ்வரி(18ஏ,குளப்பிட்டி ஒழுங்கை),வி.ரேகா(புலவாணர் ஒழுங்கை,கல்வியங்காடு), ஆர்.பிரவீணா(பவலஸ்ரன்,உடுவில்), ரி.சிவானந்தி(காட்டுப்புலம், தொண்டமானாறு),ரி.ஜெயமாலினி(மீசாலை தெற்கு, மீசாலை), எஸ்.சிவதீபா(விடத்தற்பளை, மிருசுவில்), பி.அனுசியா(வைத்தியர் சுப்பிரமணியம் றோட்,சுன்னாகம்),

பி.பாலசூரியன் (10,இந்துமகளிர் ஒழுங்கை,கந்தர்மடம்), ரி.மேகலா(விபுலானந்தர் வீதி,மாதகல்), ரி.தேவகி(மாவடி வளவு, புலோலி தெற்கு), ஜி.கோகிலறமணன்(லொக்வூட் ஹவுஸ், கல்லூரி வீதி,வட்டுக்கோட்டை), எஸ்.சிவகுமார்(55, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை), பி.சயந்தன்(சோடக்கன், இளவாலை தெற்கு), கே.நிரஜா(கன்பொல்லை வீதி, கரவெட்டி மேற்கு), கே.தாரணி(ரயில் றோட், கொக்குவில் கிழக்கு), ஆர்.அனுதா (நெல்லியன்,சுழிபுரம்),

பி.வனஜா (மீசாலை தெற்கு, கொடிகாமம்), கே.லோகநாதன்(105, அரசடி றோட், கந்தர்மடம்), எஸ்.வானதி(குறும்பன், ஏழாலை மேற்கு), ஜெ.சுதர்ஷினி(பிரசாட் றோட், நவாலி தெற்கு), ரி.நிரூஜினி(கைதடி, நாவற்குழி),என்.தயாநிதி(84, கல்லூரி வீதி, நீராவியடி), பி.தயாளினி(பணிக்கர் லேன், திருநெல்வேலி), பி.தாட்சாயினி(58, பழம் றோட், கந்தர்மடம்), ரி.சாருண்ஜா(கணேஸ்வரம், அளவெட்டி), ஆர்.ஜமீலா(தேவி கோவிலடி,ஏழாலை மேற்கு),

ஏ.அனித்தா(சூழாவடி ஒழுங்கை,ஆனைக்கோட்டை), பி.ரோகிணி(பெருந்துறை, புலோலி தெற்கு), கே.கஜந்தா(16/9, சீனியர் லேன், கலட்டி), ஏ.குமுதா(188, கண்டி றோட், சாவகச்சேரி), கே.பேரம்பலம்(96, கலைமகள் றோட்,அரியாலை), சந்திரகாந்(40/2, கலைமகள் வீதி, அரியாலை), எஸ்.சிவப்பிரியா(துச்சன்தோப்புக் கோவிலடி, கரவெட்டி மத்தி), கே.குலராஜ்(பெரி, டி.சில்வா மாவத்தை, பேராதனை வீதி, கண்டி),

எஸ்.ஞானக்குமரன்(இராமகிருஷ்ண பவனம்,கொக்குவில் கிழக்கு), என்.பிரதீபன் (சோதியடி, பொலிகண்டி), ய.கிருஷ்யா(5/1, புறூடி லேன்,அரியாலை), ரி.சியாமளா(மணல், தம்பசிட்டி, பருத்தித்துறை), கே.சங்கீதா (கோவில் தோட்டம், அல்வாய் வடக்கு), வி.தர்ஷிகா(645, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்). (ச)

# பத்திரிகையாளராகக் கடமையாற்றுவது யாழ்ப்பாணத்தில் பயங்கரமான செயல்

## யாழ்.ஊடக வளங்கள் மைய சர்வதேச இணைப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

உயிரினைப் பணயம் வைத்து சேகரிக்கப்படும் எந்தவொரு செய்தியும் ஒரு உயிரை இழக்கும் அளவிற்கு பெறுமதி வாய்ந்ததாக இருக்க மாட்டாது எனவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் ஒருவர் கடமையாற்றுவதுஎன்பது ஒரு பயங்கரம் நிறைந்த விடயமாகும் என யாழ்.ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் சர்வதேசத்திற்கான இணைப்பாளரும் ஆலோசகருமான ஹென்றிக் குறூனட் தெரிவித்துள்ளார்.

ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நிறுவனப் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற 'மனித உரிமை, பெண்கள் உரிமை, சுகாதாரம் மற்றும் விசேட கவனிப்புடன் ஊடகங்களுக்கு செய்தி சேகரிப்பு- அறிக்கையிடல்' என்ற தலைப்பிலான இருநாள் பயிற்சிப் பட்டறையை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இவ்வளவு கொலை நடைபெற்றுள்ள போதும் அது குறித்து எவரும் கைது செய்யப்படாதிருப்பது நமக்கெல்லாம் மிகுந்தவேதனையைத் தருகின்றது. இதற்காக நான் சர்வதேசத்தின் மீது குற்றம் சுமத்துகிறேன்.

யாழ்.குடாநாட்டில் மிக மோசமாக மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் குறித்து மனித உரிமைகள் சம்பந்தமான அதிகாரிகளும் - அரச அதிகாரிகளும் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். யாழ்ப்பாணத்தில் மிக மோசமாக மனித உரிமைகள் மீறப்படும் தருணத்தில் இத்தகையதொரு 'பயிற்சிப்பட்டறை' யாழ். ஊடகவியலாளர்களுக்கு நாம் நடத்துவது மிகவும் பிரயோசனம் மிக்கதாக அமையும் என்று நான் நம்புகிறேன் என்றும் ஹென்றிக் குறூனட் குறிப்பிட்டார். (ச-3,49)

# பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துப் பல்கலைக்கழக ஊழியர்களால் கடந்த இரு வாரங்களாக நடாத்தப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றிலிருந்து கைவிடப்பட்டது.

பல்கலைக்கழக ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்ததையடுத்து இப் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அனைத்துச் செயற்பாடுகளும் வழமைபோல் நடைபெற்றன. எனினும் மாணவர்கள் சமுகமளிக்காததால் விரிவுரைகள் எவையும் நேற்று நடைபெறவில்லை.

❖புதிய சம்பளத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட நிலையிலும் நடைமுறைப்படுத்தப்படாமை.

❖சம்பள முரண்பாடுகள் களையப்பட வேண்டும்.

❖மாதாந்த இழப்பீடு நிலுவையைப் புதிய ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

# சூழல் மாசுபடுவதைத் தடுக்க 8 ஆண்டுகளுக்குள் நடவடிக்கை

(புதுடில்லி)

புவி வெப்பமாதலை இன்னும் எட்டு ஆண்டுக்குள் தடுத்து நிறுத்த வேண்டும்.எனவே சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வாயுக்களை வெளிபடுத்தும் பூமியிலிருந்து எடுக்கப்படும் எரிபொருள் பயன்பாட்டிலிருந்து அனைத்து நாடுகளும் மாறியாக வேண்டும் என்று ஐ.நா.எச்சரிக்கை விட்டுள்ளது.

பூமி உறைந்து போகாமல் இருக்க ஓரளவுக்கு வெப்பம் தேவை. இந்த வெப்பத்தை காபனீர்ரொட்சைட், மீத்தேன் போன்ற வாயுக்கள் ஏற்படுத்துகின்றன. இவை பூமியின் மேற்பரப்பில் இயற்கையாக உருவாகும் தன்மை கொண்டவை.

இவை போதியளவு வெப்பத்தை உருவாக்கி பாதுகாப்புக் கவசம் போல பூமி உறைந்து போகாமல் பாதுகாக்கின்றன. ஆனால் நிலக்கரி கச்சாய் எண்ணெய் போன்ற பூமியிலிருந்து எடுக்கப்படும் படிம எரிபொருளைப் பயன்படுத்துவதால் காபனீர்ரொட்சைட், மீத்தேன் போன்ற வாயுக்களின் அளவு அதிகரித்து சுற்றுச் சூழலை மாசுபடுத்தி பூமியை மிகவும் வெப்பம் ஆக்கின்றன.

இயற்கைக்கு எதிராக நடக்கும் இந்தப் போக்கு மிகவும் ஆபத்தானது. நிலக்கரி மற்றும் கச்சாய் எண்ணெயில் இருந்து கிடைக்கும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களின்பயன்பாடு உலகளவில் மிகவும் உச்சத்தில் இருக்கின்றது. இதனால் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவுக்கு புவி வெப்பம் அடைந்து வருகின்றது எனத் தெரியவருகிறது. (ச)

# மாணவர்களை விடுதலை செய்ய மாணவர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்ட
பாடசாலை மாணவர்களை உடனடியாக
விடுதலை செய்யவேண்டும் என சர்வதேச
தமிழீழ மாணவர் பேரவை கோரியுள்ளது.
இரவு வேளையில் பெற்றோர்கள் கதறக்கதற
ஈவிரக்கமற்ற முறையில் இம் மாணவர்கள்
ஆயுத முனையில் கடத்தப்பட்டுள்ளனர்.

இக் கடத்தல் சம்பவமானது ஏனைய
மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஒட்டு
மொத்த கல்விச் சமூகத்துக்குமே விடப்பட்ட
பாரிய சவாலாகும். இதனை நன்கு புரிந்து
கொண்டு மாணவர்கள் விடுதலைக்கு அனைத்
துத் தரப்பும் குரல் கொடுக்க வேண்டும். (ஏ)

# 17 ஆயிரம் இலங்கையர்கள் அகதிகளாக இந்தியாவில் !

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த 12 பேர் நேற்று
முன்தினம் அகதிகளாக இந்தியாவின்
தனுஷ்கோடியை வந்தடைந்துள்ளதாக
தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா பிரதேசத்தை சேர்ந்த இவர்கள்
கடந்த 6 ஆம் திகதி தலைமன்னாரில்
இருந்து படகு மூலம் சென்றடைந்துள்ளனர்.

நான்கு பெண்கள் மற்றும் நான்கு குழந்
தைகள் அடங்கலாக 12 பேர் தனுஷ்கோடி
அரிச்சல் முனைக் கடற்பகுதியை வந்தடைந்
துள்ளனர்.

இவர்களிடம் விசாரணைகளை மேற்
கொண்ட தமிழக காவல்துறையினர் விசார
ணைகளின் பின்னர் அவர்களை மண்டபம்
அகதிமுகாமிற்கு அனுப்பி வைத்துள்ளதாக
தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் இது
வரை 17 ஆயிரம் இலங்கையர்கள் அகதி
களாக இந்தியாவுக்கு இடம் பெயர்ந்துள்ள
தாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள்
தெரிவிக்கின்றன. (ச-3)

# உலக உணவுத்திட்ட நிறுவனம் விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் குற்றச் செயல்
களை பாதுகாக்க முனைவதாக ஐக்கிய நாடு
கள் சபையின் அங்கமான உலக உணவுத்
திட்ட அமைப்பிற்கு அரசு கண்டனம் வெளி
யிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித
போகொல்லாகம உலக உணவுத் திட்ட
அமைப்பின் இலங்கைக்கான இயக்குநர்
ஜெஃப் ரஃப்ட்-டிக் மீது இந்தக் குற்றச்
சாட்டை சுமத்தி அவரை விசாரணைக்கு
அழைத்துள்ளார்.

கிளிநொச்சியில் பணிபுரிந்த இந்த
அமைப்பின் இரண்டு உள்ளூர்ப் பணியாளர்
கள் கடந்த மாதம் முற்பகுதியில் விடுதலைப்
புலிகளால் கடத்தப்பட்டதாகவும் இது பற்றி
உலக உணவுத்திட்ட அமைப்பு தம்மிடம்
முறையிடவில்லை எனவும் போகொல்லா
கம தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித
போகொல்லாகமவின் இந்தக் குற்றச்சாட்டு
பற்றி உலக உணவுத்திட்ட அமைப்போ
அன்றி விடுதலைப்புலிகளோ கருத்து எத
னையும் வெளியிடவில்லை. (ச-5)

# தமிழக உறவை துண்டிக்கவே புலிகள் மீது குற்றச்சாட்டு

## ராமதாஸ் பேட்டி

(சென்னை)

ஈழத்தமிழர்கள் மீதான தமிழகத்தின்
பரிவை வேரறுக்கவே தமிழீழ விடுதலைப்
புலிகள் மீது தமிழகக் காவல்துறையினர்
பொய்க்குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்கின்
றனர் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறு
வுனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்
ளார்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் ஜீனி
யர் விகடன் இதழுக்கு அவர் அளித்த நேர்
காணலில் இது குறித்து கூறியுள்ளதாவது;

தமிழக மீனவர்களை விடுதலைப்புலி
கள் தான் கடத்திக் கொன்றார்கள் என்று
தமிழக டீ.ஜீ.பி.சொல்லியிருக்கிறார்கள்.
இது பற்றி உங்கள் கருத்து என்ன?

டீ.ஜீ.பி. சொல்வது எல்லாம் ஏதோ ஒரு

புலிகள் கடத்தியிருக்கவும் மாட்டார்கள்
அவர்களைக் கொன்றிருக்கவும் மாட்டார்கள்
எந்தக் காலத்திலும் புலிகள் நமது மீனவர்
களை தாக்கியதில்லை. ஆனால் இதுவரை
இராணுவத்தினர் சுமார் 300 தமிழக மீன
வர்கள்ள சுட்டுக்கொன்றுள்ளனர். அப்போ
தெல்லாம் நாம் மத்திய அரசுக்கு கடிதம் எழு
துவுவோம் என்றார். (ச)

### இயற்றாலையில்...

அண்மையில் உள்ள வீடொன்றில் வைத்து
துப்பாக்கிச்சூடு நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்
ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை
மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான்
அ.பிறேம்சங்கர் பிரேத பரிசோதனைக்காக

# பிரித்தானிய அரசின் நிதிமுடக்கம் கவலையை ஏற்படுத்தவில்லை

அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானிய அரசு இலங்கைக்கு வழங்
குவதாக உறுதியளித்திருந்த 5.9 மில்லியன்
அமெரிக்க டொலரில் எஞ்சியுள்ள 3 மில்லி
யன் அமெரிக்க டொலரை தற்பொழுது
வழங்க முடியாது என கடந்த வாரம் அறி
வித்திருந்தது.

பிரித்தானியாவின் வெளிநாட்டு அபி
விருத்தி அமைச்சர் கறத் தோமஸ் இந்த
அறிவித்தலை விடுத்ததுடன் இலங்கை அர
சின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள்
உடனடியாக நிறுத்தப்படவேண்டும் எனவும்
வலியுறுத்தியிருந்தார்.

இது பற்றிக் கருத்துக்கூறிய வெளிவிவ
கார அமைச்சர் றோகித போகொல்லாகம
பிரித்தானிய அரசின் இந்த நிதி முடக்கத்தை
தமது அரசு ஒரு பொருட்டாகக் கொள்ளவில்
லை எனவும் இதில் தமது அரசு அதிக அக்க
றை செலுத்தவில்லை என்றும் கூறினார்.

இருப்பினும் சுனாமி மீள்கட்டுமாணப் பணி
களுக்கென பிரித்தானிய அரசு வழங்குவதாக
ஒப்புக்கொண்ட நிதியை தற்பொழுது வழங்க
மறுப்பது முறையற்ற செயல் எனவும் போ
கொல்லாகம கண்டனம் தெரிவித்துள்ளார். (ஏ-5)

# பல்கலைக்கழக மாணவர்களின் புதிய அனுமதிகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை பல்கலைக்கழக கல்வி சார்
ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்தப்
போராட்டம் காரணமாக புதிய கல்வி ஆண்
டுக்கான,2006-2007 ஆம் ஆண்டுக்கான
மாணவர்களை பல்கலைக்கழகங்களில்
அனுமதிக்கும் நடவடிக்கை காலவரையறை
இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்
கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு வாரமாக அனைத்துப்
பல்கலைக்கழகங்களிலும் கல்விசாரா ஊழி
யர்கள் மூன்று அம்சக்கோரிக்கையை வலி
யுறுத்தி தொடர்ச்சியான வேலைநிறுத்த
போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இன்று புதிய மாணவர்களை பல்கலைக்
கழகங்களுக்கு அனுமதிக்கும் செயற்பாடுகள்
இடம் பெறுவதாக பல்கலைக்கழகத்திற்கு
தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அறி
வுறுத்தப்பட்டிருந்த போதிலும் கல்வி சாரா
ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்தப்
போராட்டம் காரணமாக பல்கலைக்கழக
அனுமதிகள் காலவரையறையின்றி ஒத்தி
வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக
மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்
ளது. (ச-5)

### வவுனியாவில்...

சுட்டதில் அந்த இளைஞர் கொல்லப்
பட்டதாகவும் மற்றையவர் தப்பிச் சென்று
ள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்
துள்ளனர்.

கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் பரி
சோதனைக்காகவும் அடையாளம் காண்
பதற்காகவும் வவுனியா மருத்துவமனையில்
வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

### பிரிட்டன்...

என்ற அமைப்பு கொழும்பு பிரித்தானிய
தூதரகத்திற்கு முன்னால் நேற்று கண்டன
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

அதேவேளை நாடாளுமன்ற அவையில்
ஜே.வி.பியின் கோரிக்கையின் பேரில் இது
குறித்த நீண்ட பிரத்தியேக விவாதம் ஒன்றும்
நடத்தப்பட்டுள்ளது. இதில் உரையாற்றிய
ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுவின்
தலைவரும் பிரசார செயலாளருமான விமல்
வீரவன்ச,இலங்கை பிரித்தானிய காலனித்
துவ ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரம்
பெற்று சுமார் 50 வருடங்களுக்கு மேலாகி
விட்ட நிலையில் இலங்கையில் உள்நாட்டு
விடயத்தில் அது தலையிடுவதற்கு எவ்வித
அதிகாரமும் கிடையாது என்று தெரிவித்தார்.(ஏ-)

### மன்னார்...

டுள்ளது என விடுதலைப்புலிகள் தெரிவித்த

### வெளிநாட்டவர்களின்...

அவசியம் அற்றது எனவும் ஜனாதிபதி
கூறினார். தாம் பயங்கர வாதத்திற்கு உரிய
மொழியில் பதிலளிப்பதாக மக்கள் மத்தி
யில் நம்பிக்கை ஒன்று எழுந்துள்ள தாகவும்
அதே போல் தமது கட்சி அரசியல் தீர்வு யோச
னை ஒன்றையும் முன்வைக்க வுள்ளதாக
வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ் அனைத்து நடவடிக்கைகள் மூலம்
பயங்கரவாதத்தை தோற்கடிக்க சிறந்த
அடித்தளத்தை இட்டுள்ளதாக ஜனாதிபதி
கூறியுள்ளார். (ச-3)

### புலிகளின்...

பத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சி
யின் கூட்டம் ஒன்றில் இக் கருத் துக்களை
அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி
பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து
நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்கக்
கோரியும் அரசாங்கம் அது குறித்து அசமந்
தப் போக்கை காட்டிவருவது வேடிக்கையாக
வுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். (ச-3)

### கூட்டமைப்பு...

பயணித்த தனது வாகனம் நாடாளுமன்ற
உறுப்பினர்களுடையது என அடையாளப்ப
டுத்திய பின்பும் சோதனையி டப்பட்டமை
தமக்குரிய நாடாளுமன்ற சிறப்பு ரிமையை
மீறிய செயல் என பத்மினி சிதம் பரநாதன்
தெரிவித்துள்ளார்.

இதேபோன்று தனது வீட்டில் படையினர்
முகாம் அமைத்திருப்பதாகவும் இதன் மூலம்
தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்
டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்
பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதழுக்கு அவர் அளித்த நேர்காணலில் இது குறித்து கூறியுள்ளதாவது;

தமிழக மீனவர்களை விடுதலைப்புலிகள் தான் கடத்திக் கொன்றார்கள் என்று தமிழக டீ.ஜீ.பி.சொல்லியிருக்கிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

டீ.ஜீ.பி. சொல்வது எல்லாம் ஏதோ ஒரு மர்ம நாவலைப் படிப்பதுபோல் இருக்கிறது.

அவர் சொல்வது எதுவும் நம்பும்படியாக இல்லை. தமிழக மீனவர்களை நிச்சயமாக

## இயற்றாலையில்...

அண்மையில் உள்ள வீடொன்றில் வைத்து துப்பாக்கிச்சூடு நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ச-5)

துவ ஆட்சியாளர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்று சுமார் 50 வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் இலங்கையில் உள்நாட்டு விடயத்தில் அது தலையிடுவதற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்று தெரிவித்தார்.(ஏ-)

## மன்னார்...

டுள்ளது என விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். எனினும் இத் தாக்குதல் சம்பவம் குறித்து பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் செய்தி எதனையும் வெளியிடவில்லை.

(ச-5)

சோதனையி டப்பட்டமை தமக்குரிய நாடாளுமன்ற சிறப்பு ரிமையை மீறிய செயல் என பத்மினி சிதம் பரநாதன் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று தனது வீட்டில் படையினர் முகாம் அமைத்திருப்பதாகவும் இதன் மூலம் தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயங்கள் குறித்து சபாநாயகர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் நாடாளுமன்றத்தில் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ச-3)


**Hatton National Bank**

**அடகுப் பொருட்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்**

எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக்கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500/=) செலுத்தி காலாவதித்திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

(சி-045) முகாமையாளர்.


## றிச்சட் பௌச்சர்...

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பை வந்தடைந்த பௌச்சர் இன்று யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இங்கு வரவுள்ளார்.

பலாலி விமான நிலையத்தை வந்தடையும் அவர் அங்கு யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியுடன் யாழ்.நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ்.செயலகத்திற்குச் செல்லும் பௌச்சர் அரச அதிபர் க.கணேஷை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இச் சந்திப்பின் போது கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தின் பின்னரான நிலைமைகள் குறித்தும் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்தும் விரிவாக கேட்டறியவுள்ளார்.

அதன்பின் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சில இடங்களுக்கும் அவர் சென்று பார்வையிடவுள்ளதாக அமெரிக்கத் தூதரகத்தை மேற்கொள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. யாழ்ப்பாண விஜயத்தின்போது பௌச்சர் யாழ்.ஊடகவியலாளர்களையும் சந்திப்பார் எனக்கூறப்பட்டது.

இதேவேளை பௌச்சரின் விஜயத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் றிச்சட் பௌச்சர் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று பிற்கல் 3.10 மணியளவில் இலங்கை வந்தடைந்துள்ளார்.

லண்டனில் இருந்து விமானம் மூலம் கட்டுநாயக்காவை வந்தடைந்த இவரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

இதேவேளை பௌச்சர் இலங்கையின் சமாதான நகர்வுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பல உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவுள்ளார்.அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் ஆகியோருடன் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளதாக அமெரிக்கத்தூதரக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

றிச்சட் பௌச்சர் இன்று வெளிவிவகார அமைச்சரை சந்திக்கவுள்ளதுடன் நாளை மறுதினம் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் றிச்சட் பௌச்சர் ஊடக வியலாளர்களைச் சந்தித்து தனது விஜயத்தின் பிரதிபலன் குறித்து கருத்துரைப்பார் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.